# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.D.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சார்லின் | அசல் வழக்கு எண். | 45/2020 |
| த/பெ. | - | அன்பழகன் | பி.வா.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

11.06.2025.

இ.ம.எண்.907/2024 ல் பிறப்பித்த உத்தரவின்படி சாட்சி அழைக்கப்பட்டு முதல் விசாரணை.

1. நான் தற்போது வானூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நான் அழைப்பாணையின் அடிப்படையில் வட்டாட்சியரில் உத்தரவின் பேரில்தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய அலுவலக அடையாள அட்டையின் நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 20.01.2022 ம் தேதிக்கு முன்பு கொண்டாமூர் கிராமம், சர்வே எண்.145/19 அதன் பட்டா எண்.171 ஆனது யாருடைய பெயரில் இருந்தது என்றால் ராமு மகன் எட்டியான் என்பவர் பெயரில் இருந்துள்ளது. 20.01.2022 ம் தேதிக்கு பின்பு மேற்படி பட்டா யார் பெயரில் மாறியுள்ளது என்றால் கணினி சிட்டா மாற்றும் அலுவலக பதிவேட்டில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணமானது வானூர் வட்டாட்சியரால் வழகங்கப்பட்டதா என்றால் ஆவண கோப்புகளை பார்க்காமல் சொல்ல முடியாது. பட்டாவில் மாற்றம் செய்யும்போது அப்பட்டாவை மாற்றுவதற்கான உத்தரவிடும் அலுவலரின் குறிப்பாணை இல்லாமல் மாற்றம் செய்ய முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மாற்றம் செய்யப்பட்டதற்கான கோப்புகளை நான் எடுத்து வந்துள்ளேனா என்றால் கோப்புகள் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை, அதனால் எடுத்து வரவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ள மண்டல துணை வட்டாட்சியரின் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ 1 ஆவணம் உண்மையா என்பதை கண்டறிவதற்கு பின்கோப்புகள் அவசியம் என்றால் சரிதான். பொதுவாக வட்டாட்சியர் அலுவலகத்தில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை பின் கோப்புகள் அழிக்கப்படும் என்றால் அதை வட்டாட்சியர்தான் முடிவு செய்வார். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கான பின்கோப்புகள் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை என்ற விபரத்தை நான் வட்டாட்சியரிடம் தெரியப்படுத்தினேனா என்றால் தெரியப்படுத்தினேன், அதற்கு அவர் எந்த பதிலும் சொல்லவில்லை.

4. தொண்டாமூர் கிராமம், சர்வே எண்.145/20-க்கான பட்டா எண்.29 ஆனது யாருடைய பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.145/20 க்கான பட்டா எண்.171 ஆகும். அது தற்போது காளி மகன் முருகேசன் பெயரில் உள்ளது. மேற்படி காளி மகன் முருகேசன் என்பவருக்கு எப்போது பட்டா வழங்கப்பட்டது என்றால் நத்தம் செட்டில்மெண்ட்படி 1997 ல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பின்கோப்புகள் எங்களிடம் இல்லை என்றால், நத்தம் செட்டில்மெண்டிற்கு குறிப்பாணை இருக்குமா என்று எனக்கு தெரியாது.

5. பொதுவாக நத்தம் செட்டில்மெண்ட்படி பட்டா வழங்குவதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சிறப்பு வட்டாட்சியருக்குதான் அதிகாரம் உள்ளது. சர்வே எண்.145/20 க்கான பட்டா எந்த அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது என்றால், நத்தம் தூய அடங்கலில் சிறப்பு தாசில்தார் கொடுத்ததாக குறிப்பு உள்ளது. ஒரு பட்டாவின் உண்மை தண்மையை பின் கோப்புகள் இல்லாமல் அறுதியிட்டு கூறமுடியாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை.

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு அனுமதி கடிதம் நான் எடுத்து வரவில்லை என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சர்வே எண்.145/19 க்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எட்டியான் பெயரில் உள்ளது. எண்.145/20 க்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் முருகேசன் பெயரில் உள்ளது. நான் சரிவர கோப்புகளை எடுத்து வராததால் என்னுடைய சாட்சிகளை ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.